المملكة العربية السعودية
المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالأحساء
تحت إشراف وزارة الشئون الإسلامية والأوقاف والدعوة والإرشاد
السلسلة التعليمية
الكتاب الأول

# புதிதாக இஸ்லாத்தை ஏற்ற நான், படிக்கவேண்டியது என்ன

## أسلمت حديثاً فماذا أتعلم ؟



அணிந்துரை
கலாநிதி அலீ பின் ஸஃத் அத்துவைஜரீ
பேரறிஞர் பேரவை உறுப்பினர்

மேற்பார்வை

கலாநிதி அப்துல்லாஹ் பின் அப்துர் ரஹ்மான் அல்கல்த்தான்
அறநெறி துணைப்பேராசிரியர்: அல்இமாம் முஹம்மத் பின் ஸஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகம்

கலாநிதி அப்துல்லாஹ் பின் முஹம்மத் அல்ஜுகைமான்
பாடத்திட்டம் பயிற்றுவிக்கும் முறையியல் துணைப் பேராசிரியர்

கலாநிதி அப்துஸ்ஸலாம் பின் இப்ராஹீம் அல்ஹுஸைன்
அறநெறி அடிப்படையியல் துணைப்பேராசிரியர்: அல்இமாம் முஹம்மத் பின் ஸஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகம்

பேரறிஞர் அப்துல் அஸீஸ் பின் அஹ்மத் அல்உமைர்
நீதிபதி: அல்கதீ:ப் பொது நீதிமன்றம்

تاميلي

தயாரிப்பு: அல்அஹ்ஸா இஸ்லாமிய நிலையம், ஆய்வு மற்றும் மொழியாக்கப்பிரிவு

بسم الله الرحمن الرحيم

அணிந்து

# அணிந்துரை

**பேரறிஞர் பேரவை உறுப்பினரான மரியாதைக்குரிய கலாநிதி**

**ஷைக் அலீ பின் ஸஃத் அல்துவைஹ் அவர்கள் வழங்கியது**

அளவற்ற அருளாளன் நிகரற்ற பேரன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால்...

சகல புகழும் சர்வ வல்லவனாகிய அல்லாஹ்வுக்கே! அவனது தூதராகிய வாய்மையாளரான முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் பரிசுத்தமான குடும்பத்தினர் மற்றும் பண்பாளர்ளான தோழர்கள் மீதும் அவர்களை முறையாகப் பின்பற்றியோர் மீதும் மறுமைநாள் வரை சாந்தியும் சாமாதானமும் நிலவட்டுமாக!

சங்கை மிக்க இந்த நாட்டிற்கு வேலைக்காக வரும் முஸ்லிமல்லாத மக்களை இஸ்லாத்தின்பால் அழைப்பதற்கு அல்அஹ்ஸா இஸ்லாமிய நிலையம் மகத்தான முயற்சி செய்து வருகின்றது. அதன் விளைவாக - அல்லாஹ்வின் அருளால் - பலதரப்பட்ட நாடுகளைச் சார்ந்த மக்கள் இஸ்லாத்தைத் தழுவியுள்ளனர். அவர்களின் எண்ணிக்கை பல்லாயிரங்களை அடைந்திருக்கிறது.

அதைப்போலவே பாரம்பர்ய முஸ்லிம்களின் மார்க்க அறிவைப் பட்டைத்தீட்டி அதை மேம்படுத்துவதிலும் இஸ்லாமிய நிலையம் அதிகக் கவனம் செலுத்திவந்துள்ளது. அந்த வகையில் பயில்பவர்களின் சிந்தனைத்திறனுக்கும் தேவைக்கும் தகுந்தாற்போல் பல பாடத்திட்டங்களை உருவாக்கி அவற்றைப் பயிற்றுவித்துள்ளது இந்த நிலையம்.

அந்தப் பாடத்திட்டங்களில் ஒன்றுதான் இதோ வெளியாகியிருக்கும் “இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நான் கற்க வேண்டியது என்ன?” என்ற நூல். இது தலைப்பிற்குப் பொருத்தமான வகையில் பயனளிக்கக்கூடியதாகவும் உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் எளிய நடையிலமைந்த தெளிவான சிந்தனைகளைக் கொண்டதாகவும் புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய முஸ்லிம் சகோதரர்களுக்குப் பொருத்தமானதாகவும் இருக்கின்றது.

எனவே உயர்வுமிக்க அல்லாஹ்விடம் நான் அவனது அழகிய திருநாமங்கள் மற்றும் அவனது உயர்ந்த பண்புகளின் மூலம் வேண்டுவதாவது, இந்தச் சிறந்த முயற்சிகள் யாவையும் அல்அஹ்ஸா இஸ்லாமிய நிலையத்தாரின் நல்லறங்களின் நிறுவையில் அவன் சேர்க்க வேண்டும் என்பதையே! மேலும் அவர்களின் சொற்செயல்களிலுள்ள பாவங்களை மன்னித்து அவர்களுத்தான் விரும்பியவாறும் திருப்தியுடனும் அருள்புரிய வேண்டும் என்றும் அல்லாஹ்வை மன்றாடுகின்றேன்.

ஸலவாத்தும் ஸலாமும் முஹம்மத் நபி, அன்னாரின் உற்றார் - உறவினர்கள், அவர்களை முறையாகப் பின்பற்றியோர் அனைவர் மீதும் நிலவட்டுமாக!

கலாநிதி அலீ பின் ஸ'.த் அல் துவைஹ் (கையொப்பம்)

# முகவுரை

எல்லாப் புகழும் வல்ல அல்லாஹ்வுக்கே! சாந்தியும் சமாதானமும் சாந்த நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் தோழர்கள், மறுமைநாள் வரை அவர்களை முறையாகப் பின்பற்றுகிற அனைவர் மீதும் நிலவட்டுமாக!

அல்அஹ்ஸா இஸ்லாமிய நிலையத்தின் இலட்சியங்களில் பொதுவாக முஸ்லிம்களின் கொள்கைக் கோட்பாடுகளில் குழப்பம் வராமல் காப்பதும் குறிப்பாக முஸ்லிமல்லாதவர்களை இஸ்லாத்தின்பால் அழைப்பதும் இடம்பெறுகின்றன. அவற்றுடன் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு பயன்தரத்தக்க கல்வியை போதிப்பதும் உள்ளது. இந்த இலட்சியத்தை அடைவதற்காக நிலையம், ஆண்டுதோறும் ஒரு திட்டத்தை உருவாக்கி, அதில் மார்க்க ஞானத்தைப் போதிப்பதற்கான பயிற்சி முகாம்களை நடத்திவருகிறது. இந்தப் பயிற்சி முகாம்களில் கற்போரைப் பற்றிய நிலைப்பாடு, கல்விக்காலம், கற்பித்தலுக்கான உபகரணங்கள் என இலட்சியங்களை எட்டிப்பிடிப்பதற்றுத் தேவையான எல்லா அம்சங்களிலும் கவனம் செலுத்தப்படுவது அவசியமாகிறது. எனவே அதற்கான ஒரு பாடத் திட்டம் உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அது தெளிவான நடையில் சரியான தகவல்களில் முக்கியமானவற்றை உள்ளடக்கிய திட்டமாக இருந்து இது சிறப்பான உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது உணரப்பட்டது. இந்தப் பாடத்திட்டத்தின் பின்னணியில் இத்துணை பாக்கியமிக்க தொடர் முயற்சிகள் உள்ளன.

வெளிநாட்டவருக்கான நிறுவனங்கள் மற்றும் இஸ்லாமிய கேந்திரங்களில் பெரும்பாலானவை இந்த பாடத்திட்டத் திலிருந்து பயன்பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் நமது நிலையம் இந்தப் பாடத்திட்டத்தை மார்க்கஞான தலைப்புகளில் அதிகக் கவனம் செலுத்தி, சற்று விரிவாகவே தொகுத்துள்ளது. அனைத்துப் பாடத்திட்டங்களுக்கும் தனித்தனியான வரையறைகள் அமைக்கப்பட்டிருப்பதற்கு ஒப்ப இதைப் பயன்படுத்துவது மிகவும் சுலபமானது. அந்த வரையறைகள், குறிப்பிட்ட நேரத்தில் ஜனரஞ்சகமான முறையில் பொருத்தமான கட்டத்தில் பயன்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.

உங்களின் கைகளில் தவழும் "இஸ்லாத்தைப் புதிதாக ஏற்றுக்கொண்ட நான் கற்க வேண்டியது என்ன?" (முதலாம் நிலை)' என்னும் இப்பிரசுரம், அல்அஹ்ஸா இஸ்லாமிய நிலையத்தின் தயாரித்து வெளியிட்ட பாடத்திட்ட தொகுப்புகளில் முதலாவது பாடத்திட்டமாகும். இந்தப் பாடத்திட்டங்கள், அல்லாஹ்வின் அருளால் முக்கியமான போதனைகள், ஒழுக்கப் பயிற்சிகளைக் கற்பித்தலில் உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் பிரசுரத்தின் மூலம் நல்ல பலனை ஏற்படுத்த வேண்டுமென்றும் இதனை உருவாக்குவதில் பங்கெடுத்த அனைவருக்கும் நற்கூலியை வழங்க வேண்டுமென்றும் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். அவனே அதற்குப் பொறுப்பானவனும் சக்தியுள்ளோனுமாவான். புகழனைத்தும் அகிலமனைத்தையும் படைத்து இரட்சித்துக் காப்பாற்றிக்கொண்டிருக்கும் அல்லாஹ் ஒருவனுக்கே! சாந்தியும் சமாதானமும் நமது இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் நிலவட்டுமாக!

நிலையத்தின் இயக்குனர்

அப்துர்ரஹ்மான் பின் ஸுலைமான் அல்ஜுகைமான்

# முன்னுரை

இந்த மார்க்கத்தின் பால் நமக்கு வழிகாட்டி நம்மீது கருணை புரிந்த வல்ல நாயன் அல்லாஹ்வுக்கே சகல புகழும்! அவன் நமக்கு நேர் வழிகாட்டியிருக்காவிட்டால் நாம் நேர்வழி பெற்றிருக்கவே இயலாது. அவன் நம்மை இருளிலிருந்து வெளியேற்றி பிரகாசத்தின்பால் செலுத்தியுள்ளான் பதற்றத்திலிருந்து நிம்மதியின்பால் வழிகாட்டியுள்ளான் துர்பாக்கிய நிலையிலிருந்து நற்பாக்கியத்தின்பால் கொண்டு வந்துள்ளான். சாந்தியும் சமாதானமும் அல்லாஹ் யாரை நேர்வழி காட்டியாகவும் நற்செய்தி கூறுபவராகவும் அல்லாஹ்வின் அனுமதியுடன் அவனுடைய பாதையில் (மக்களை) அழைப்பவராகவும் ஒளி தரும் விளக்காகவும் ஆக்கி, சீரான சமூகத்திற்கு நேர்வழிகாட்டுகிற வேதத்தை அவர் மீது இறக்கி வைத்து அவரை அகிலமனைத்திற்கும் அருட்கொடையாகவும் வழங்கியுள்ளானோ அத்தகைய இறைத்தூதர் மீது சாந்தியும் சமாதானமும் நிலவட்டுமாக!

## இந்நூல் நோக்கப்பட்டது ஏன்?

ஒவ்வொரு நாளும் உலகின் பல்வேறு இடங்களிலும் இஸ்லாத்தைத் தழுவுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருகின்றது, இறைவனுக்கே சகல புகழும்! இதனால் புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்கள் என்ற வகையில் அவர்களுக்கு மார்க்க விளக்கங்களையும் சமூக அளவில் அவர்களுக்கு இருக்கின்ற கடமைகள் மற்றும் உரிமைகளையும் கற்பித்தல் ஆகியவற்றில் இறைவழியின்பால் அழைப்பு விடுக்கும் பிரச்சாரகர்களின் மகத்தான பொறுப்பு சற்று அதிகமாகின்றது.

இஸ்லாத்தை ஏற்றவுடனேயே மேற்கொள்ள வேண்டிய பெரும்பாலான மார்க்கக் கடமைகள் அதாவது தொழுகை மற்றும் அது முறையாக நிறைவேறுவதற்கான காரண காரியங்கள் உள்ளன என்பது நாமறிந்த ஒன்றுதான். புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கு மார்க்கத்தைக் கற்றுக்கொடுப்பதற்கான நூற்களில் பெரும்பாலானவை பயிற்சி பெறுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் தொகுக்கப்பட்டவையாக இல்லை. மாறாக அவர்களுக்கான நூல், ஒரு கலாச்சார யுக்தியை உள்ளடக்கிய பிரச்சார திட்டமாக இருக்க வேண்டும். அது இஸ்லாத்தில் அவர்கள் நுழைந்த நாளன்றே அவர்களை வரவேற்கும் படியாக இருக்க வேண்டும். மார்க்க அடிப்படைகளில் போதிய ஞானமில்லை என்று அதைக் கற்றவர்கள் கருதப்படாத அளவுக்கு அதில் மார்க்கத்தைப் பற்றிய ஞானம் நிறைந்திருக்க வேண்டும். அதுவும் மிக எளிமையான முறையில் மிகக் குறைந்த கால அவகாசத்தில் கற்றுத் தேறும் வகையில் அமைக்கப் பெற்றிருக்க வேண்டும்.

அந்த வகையில் அல்அஹ்ஸா இஸ்லாமிய நிலையம் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக புதிய சகோதரர்களுக்கு மார்க்கக் கல்வி வழங்கும் பொறுப்பைத் தனது தோளில் சுமந்து வருகிறது. தற்போது அந்தக் கல்வி முறைக்கு ஓர் அடிப்படையை வகுக்க வேண்டும், அது கடந்த வருட பிரச்சார மற்றும் பயிற்றுவிப்பு அனுபவங்களின் சாரமாக இருக்க வேண்டும் என்றும் நிலையம் விரும்பியது. அந்த விருப்பத்திற்கேற்ப ஒரு பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அது புதிய சகோதரர்களுக்குக் கட்டாயமாக பயிற்றுவிக்கப்பட வேண்டிய மார்க்கச் சட்டங்கள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக தெளிவானதாகவும் விரிவானதாகவும் தொகுக்கப்பட்டுள்ளது.

## பயன்பெறுவோர்:

புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்கள் - ஏற்றுக் கொண்ட முதல் வாரத்தில்.

## நூலின் சில சொற்பிரயோகங்கள்

1- அல்முஹ்ததீ அல்ஜதீத்: இஸ்லாத்திற்குப் புதிதாக வந்தவர்.

2- அல்முஅல்லிம்: மார்க்க ஞானமுள்ள பிரச்சாரகர்; தயாரிக்கப்பட்ட இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள அடிப்படை அம்சங்களை விளக்கக்கூடிய சாமர்த்தியமுள்ளவர்.

3- முதல்வாரம்: புதிதாக இஸ்லாத்தைத் தழுவியதும் தொடரும் வாரம்; இந்நூல் கற்பிக்கப்படுவதற்கான கால அளவைக் குறிக்கிறது.

## பாடத்திட்டத்தின் பயன்பாட்டு முறை

1. இந்நூல், புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களில் மார்க்கச்சட்டமோ முக்கிய கடமைகளையோ பற்றி தெரிந்திராதவருக்காக உருவாக்கப்பட்டதாக இருப்பதால் இஸ்லாத்தைத் தழுவிய உடனேயே அவருக்கு இந்நூலில் உள்ள பாடங்கள் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.
2. நூலிலுள்ள பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படுவதற்கான கால அவகாசம் ஒரு வாரமாகும். ஆயினும் தேவைக்கேற்ப கால அளவை சற்று கூட்டவோ குறைக்கவோ செய்யலாம்.
3. முக்கியத்துவம் மற்றும் முதன்மைத்துவ அடிப்படையில் பாடங்களின் தலைப்புகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
4. ஒவ்வொரு பக்கத்திலும் வலப்புறம் இடம் விடப்பட்டுள்ளது, இதில் புதிய சகோதரர்கள் உடனுக்குடன் குறிப்புகளை எழுதிக்கொள்ள முடியும்.
5. ஆசிரியர், தலைப்புகளின் அட்டவணைப்படி கொஞ்சம் கொஞ்சமாக பாடங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.
6. தனித்தனியாகவோ கூட்டாகவோ இதனைக் கற்றுக்கொடுக்கலாம். ஆயினும் கற்பிப்பதில் ஈடுபடுத்தப் படும் நவீன உபகரணங்களுள்ள, பயிற்றுவிக்கும் சூழ்நிலை நிலவுகின்ற பகுதியைத் தேர்ந்தெடுப்பது நல்லது.
7. கற்பிக்க ஆரம்பிக்கும்போதே புதிய சகோதரருக்கு ஒரு பிரதி கொடுக்க பட வேண்டும்.
8. ஆசிரியர், நூலிலுள்ள தலைப்புகளையே தழுவி அவற்றிலிருந்து விலகாமல் பயிற்றுவிக்க வேண்டும், புதிய சகோதரரின் சிந்தனை சிதறாமல் இருப்பதற்காக வேண்டி.
9. முதல் சந்திப்பிலேயே ஆசிரியர், புதிய சகோதரருக்கு பாடத்திட்டம் கற்பிக்கும்போது பின்பற்றப்படும் முறைகள், நோக்கங்கள், வகுப்பினூடே மேற்கொள்ளவேண்டிய அவரது பங்குபணி ஆகியவை பற்றிய விவரங்களை விளக்கிவிட வேண்டும்.

## நூலின் உள்ளடக்கத்தின் தராதரம்

இந்நூலிலுள்ள கருத்துக்கள் யாவும் திருமறைக்குர்ஆன் மற்றும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு மார்க்க அறிஞர்களால் பரிசீலிக்கப்பட்டு புதிதாக இஸ்லாத்தைத் தழுவுவோருக்கு ஆரம்பமாக பயிற்றுவிக்கப்படுவதற்குத் தகுந்தவை என்று சான்றுரைக்கப்பட்டவையாகும். இவற்றில் எந்த முஸ்லிமுக்கும் அவசியமான அடிப்படையான செய்திகளே உள்ளன. அனைவருக்கும் அருள்புரிய அல்லாஹ்வே போதுமானவன்!

*ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்பு பிரிவு*

*அல்அஹ்ஸா இஸ்லாமிய நிலையம்*

# பாடத்திட்ட அட்டவணை


| நாள்* | பாடத் தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| முதலாவது | இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் ............. | 10 |
| | ஈமானின் அடிப்படை அம்சங்கள் ..................... | 11 |
| | உளூ (செயல்முறை விளக்கம் மட்டும்) ............. | 12 |
| | தொழுகை (செயல்முறை விளக்கம் மட்டும்) ....... | 12 |
| இரண்டாவது | **உளூ:** | |
| | (1)அதன் சிறப்பு, (2)அதன் செயல்முறை, | 16 |
| | (3)அதை முறிப்பவை, ........................................ | 20 |
| | (4)உளூவின்றி செய்யக்கூடாதவை ..................... | 21 |
| | **காலுறைகளின் மீது மஸஹ் செய்தல்:** | |
| | (1)மார்க்கத்தில் அனுமதி (2)செயல்முறை ......... | 22 |
| | (3)கால அளவு (4)முறிப்பவை ............................ | 23 |
| | **குளிப்பு:** | |
| | (1)பூரணமான குளியல்முறை (2)குறைந்தபட்ச குளியல் முறை | 24 |
| | (3)குளிப்பைக் கடமையாக்குபவை (4)பெருந்தொடக்குள்ளவர்கள் | 25 |
| | செய்யக்கூடாதவை (5)மாதவிடாய் மற்றும் பேற்றுத் தொடக்குள்ள பெண்கள் செய்யக்கூடாதவை | 26 |
| | **காலுறைகளின்மீது மஸஹ் செய்தல்** (செயல்முறை) ..................... | 26 |
| | **உளூவும் தொழுகையும்** (செயல்முறை - மீளாய்வு) ..................... | 26 |
| | **மாதவிடாய், பெரும்போக்கு, பேற்றுத்தொடக்கு ஆகியவற்றின் சட்டங்கள்** | 27 |


* நூலின் தலைப்புகள் புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோருக்கு அவர்கள் அறிந்திருக்க வேண்டிய முக்கிய அம்சங்களைக் கற்பிப்பதற்காக வேண்டி, அல்அஹ்ஸா இஸ்லாமிய நிலையத்தில் பின்பற்றப்படும் பாடத்திட்ட முறைப்படி எட்டு தினங்களில் பிரிக்கப்பட்டுள்ளன. இதனைப் பயன்படுத்தும் தனிநபரோ வேறு நிறுவனமோ தங்களின் வசதிக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ளலாம், வரையறுக்கப்பட்ட பாடங்களைத் தொடராகப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்.

| | | |
|---|---|---|
| மூன்றாவது | **தொழுகை:**<br>அதன் முக்கியத்துவமும் சிறப்பும், கடமையான தொழுகைகள் (ரக்அத்களும் நேரங்களும்), ஸூரத்துல் ஃபாத்திஹா (மனனம் செய்வித்தல்), உளூவும் தொழுகையும் (செயல்முறை - மீள் பார்வை), ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றுவதற்காக பள்ளிக்குச் செல்லல் | 31<br>32<br>33<br>33 |
| நான்காவது | **தொழுகை:**<br>தொழுகை முறை (செயல்முறை) அத்தஷஹ்ஹுத் (மனனம்), ஸூரத்துல் ஃபாத்திஹா (மனனம் - மீள்பார்வை), உளூவும் தொழுகையும் (செயல்முறை - மீள்பார்வை) | 37<br>44<br>44<br>44 |
| ஐந்தாவது | **தொழுகை:**<br>ஸலவாத் (மனனம்), ஸூரத்துல் ஃபாத்திஹாவும் தஷஹ்ஹுதும் (மனனம் - மீள்பார்வை), உளூவும் தொழுகையும் (செயல்முறை - மீள்பார்வை) | 49<br>49<br>49 |
| ஆறாவது | **தொழுகை:**<br>ஸூரத்துல் இக்லாஸ் (மனனம்), ஸூரத்துல் ஃபாத்திஹா (மனனம் - மீள்பார்வை), தஷஹ்ஹுதும் ஸலவாத்தும் (மனனம் - மீள்பார்வை), உளூவும் தொழுகையும் (செயல்முறை - மீள்பார்வை) | 52<br>52<br>52<br>52 |
| ஏழாவது | **தொழுகை:**<br>ஸூரத்துல் அஸ்ரும் ஸூரத்துல் கவ்ஸரும் (மனனம்), ஸூரத்துல் ஃபாத்திஹாவும் ஸூரத்துல் இக்லாஸும் (மனனம் - மீள்பார்வை), தஷஹ்ஹுதும் ஸலவாத்தும் (மனனம் - மீள்பார்வை), உளூவும் தொழுகையும் (செயல்முறை - மீள்பார்வை) | 55<br>56<br>56<br>56 |
| எட்டாவது | **மதிப்பீடு.** ........................................ | 57 |

# நூலின் பொதுவான இலட்சியங்கள்

புதிய சகோதரர் இந்நூலை முழுமையாக பயின்ற பின்பு அவரிடம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள்

**முதலாவது: அறிவு சம்மந்தமானவை**

1. இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளைக் கூறுதல்
2. ஈமானின் அடிப்படை அம்சங்களைக்கூறுதல்
3. உளூவின் முறையை விவரித்தல்
4. குளிப்பின் முறையை விவரித்தல்
5. காலுறைகளின் மீது மஸஹ் செய்வதன் சட்டங்களைத் தெளிவாக்கல்
6. கடமையான தொழுகைகளின் எண்ணிக்கையைக் கூறுதல்
7. கடமையான தொழுகைகளின் சிறப்பைக் கூறுதல்
8. கடமையான தொழுகைகளின் நேரங்களைக் குறிப்பிடுதல்
9. எல்லா தொழுகைகளின் ரக்அத்களின் எண்ணிக்கையைக் கூறுதல்
10. சில சிறிய ஸூரத்களை ஓதுதல் (மனனமாக)
11. தொழுகையில் உள்ள துஆக்களை ஓதுதல் (மனனமாக)

**இரண்டாவது: செயல்பாடு ரீதியானவை**

1. கடமையான தொழுகையின் அசைவுகளை முறைப்படி நிறைவேற்றல்
2. உளூவின் அசைவுகளை முறையாக நிறைவேற்றல்
3. காலுறைகளின் மீது முறையாக மஸஹ் செய்தல்

# பாடங்களைக் கற்பிக்கும் முறைகள்

- கலந்துரையாடலும் விவாதமும்
- செயல்முறை விளக்கம்
- கூட்டு முயற்ச்சி
- சிறு சிறு குழுக்களில் செயல்முறை
- குறிப்பை உணர்த்துதல்
- கவனயீர்ப்பு வினாக்களைத் தொடுத்தல்
- உச்சரிப்பதற்குச் சொல்லிக்கொடுத்தல்

முதலாவது பாடம்

# இஸ்லாம் மற்றும் ஈமானின் அடிப்படை அம்சங்கள்

# ஸலவாத் மனப்பாடம்

## பாடத்தின் நோக்கங்கள்

பாடம் நடத்தி முடிக்கப்பட்ட பின்பு மாணவரிடம் எதிர்பார்க்கப்படுபவை:

1 மனப்பாடமாக ஸலவாத் ஓதத் தெரிந்திருக்க வேண்டும்

2 மனப்பாடமாக சூரத்துல் ஃபாத்திஹாவும் தஷஹ்ஹுதும் ஓதத் தெரிந்திருக்க வேண்டும்.

3 ஃபாத்திஹா - தஷஹ்ஹுதை ஓதி தொழுகையை செயல்முறைப்படுத்த வேண்டும்.

## பாடம் கற்பிக்கப்படுவதற்கான காலப்பங்கீடு

| தலைப்புகள் | காலம் (நிமிடங்கள்) |
|---|---|
| ஸலவாத் ஓதல் | 25 |
| ஃபாத்திஹா, தஷஹ்ஹுத் மனனம் சரிபார்த்தல் | 25 |
| தொழுகையின் செயல்முறை ஒப்பு நோக்கு | 25 |
| நோக்கம் நிறைவேறியதா என உறுதிசெய்தல் | 15 |

## கற்பிப்பதற்குத் தேவையான உபகரணங்கள்

1 ஸலவாத்தைக் கற்பிக்கும் ஒலிநாடா

2 மாணவர் முறைப்படுத்துவதற்கு வசதியாக ஸலவாத்தின் வார்த்தைகள் தனித்தனியாக எழுதப்பட்ட அட்டைகள்.

முதலாவதாக

# இஸ்லாத்தின் அடிப்படை கடமைகள்

இஸ்லாம், ஐந்து அடிப்படைகளின் மீது அமைக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதன் அவற்றை ஏற்றுக்கொண்டு, உண்மைய ஈமானுடனும் தூய்மையான-கலப்பற்ற எண்ணத்துடனும் நிறைவேற்றினாலே தவிர முஸ்லிமாக இயலாது. இப்னு உமர் (ர அறிவிக்கிறார்கள்: இஸ்லாம் ஐந்து கடமைகளின் மீது அமைக்கப்பட்டுள்ளது: நிச்சயமாக வணக்கத்திற்கு உண்மைய தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரு தூதருமாவார்கள் - என்று சாட்சி கூறுதல் தொழுகையை நிலைநாட்டுதல் ஸகாத் கொடுத்தல் ஹஜ் செய்தல் ரமளா நோன்பு நோற்றல் - என நபி (ஸல்) கூறியுள்ளார்கள். (புகாரீ, முஸ்லிம்)

## இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள்

1. இரு அம்சங்களைக் குறித்து சாட்சி கூறுதல்: நிச்சயமாக வணக்கத்திற்கு உண்மையில் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, நிச்சயமாக முஹம்மத் (ஸல்), அவனுடைய அடியாரும் தூதருமாவார்கள் - என்று நான் சாட்சி கூறுகின்றேன்.
2. தொழுகையை நிலைநிறுத்தல்
3. ஸகாத் கொடுத்தல்
4. ரமளானில் நோன்பு நோற்றல்
5. பயணச் சக்தி பெறுபவர்கள் மீது ஹஜ் செய்தல்

வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகின்றேன் என்பதன் கருத்தாவது, உண்மையில் வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவனே அனைத்து வகையான வணக்கங்களுக்கும் அதாவது, அச்சம், ஆதரவு, நம்பிக்கை, உதவி தேடுதல், இரட்சிப்புத் தேடுதல், பிரார்த்தனை, ருகூஉ, ஸுஜூது மற்றும் இவைபோன்ற அம்சங்கள் யாவற்றிற்கும் சொந்தமானவன்! அவன் மட்டுமே உண்மையான இறைவன். அவனை விடுத்து வணங்கப்படும் மற்ற அனைவருமே போலியான தெய்வங்களாவர்.

இந்த ஷஹாதா கலிமா, எதிர்மறை - உடன்பாடு என இரு அம்சங்களைக் கொண்டு அமைந்துள்ளது. அதாவது, அல்லாஹ் அல்லாதவர்களுக்கு வழிபாடுகள் அனைத்தையும் மறுப்பதுடன் வழிபாடுகள் அனைத்தும் இணையற்ற ஏக வல்லோனான அல்லாஹ்வுக்கு மட்டுமே என உறுதிப்படுத்துகிறது.

'அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்'வின் கருத்தாவது, முஹம்மத் (ஸல்) அவர்கள், அல்லாஹ்விடமிருந்து வந்த உண்மையான தூதர், அவர்களின் கட்டளைக்குக் கட்டுப்படுவதும் அவர்கள் அறிவித்ததை நம்புவதும் அவர்கள் தடுத்ததை விட்டும் தவிர்ந்துகொள்வதும் அவர்கள் காட்டிய வழியிலேயே அல்லாஹ்வை வணங்குவதும் நம்மீது கட்டாயமாகும்.

**சிந்தனைக்குச் சில**

- ஒருவர் முஸ்லிமாக ஆவது எப்போது?
- ரமளான் மாத நோன்பையும் ஹஜ்ஜையும் ஏற்றுக்கொண்ட ஒருவர் ஜகாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை எனில் அவர் முஸ்லிமாகக் கருதப்படுவாரா?

## இரண்டாவதாக

## ஈமானின் அடிப்படை அம்சங்கள்

ஈமான்கொள்ள வேண்டிய அடிப்படை அம்சங்கள் ஆறு. இந்த ஆறு அம்சங்களையும் முழுமையாக ஒரு மனிதன் நம்பவில்லையாயின் அவருடைய ஈமான் முழுமை பெறாது.

உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ஈமானைப் பற்றி கேட்டபோது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீர் அல்லாஹ்வையும் அவனது மலக்கு(களான வானவர்)களையும் அவனது வேதங்களையும் அவனது தூதர்களையும் இறுதி நாளையும் நன்மையும் தீமையும் இறைவனின் ஏற்பாட்டின்படியே என்பதையும் நம்புவதாகும் எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

### ஈமானின் ருக்னுகள் - நம்பிக்கைகொள்ள வேண்டிய அடிப்படை அம்சங்கள்

| | |
|---|---|
| 1- | அல்லாஹ்வை நம்புதல் |
| 2- | மலக்குகளை நம்புதல் |
| 3- | இறைவனிடமிருந்து இறக்கப்பட்ட வேதங்களை நம்புதல் |
| 4- | இறைத்தூதர்களை நம்புதல் |
| 5- | இறுதிநாளை நம்புதல் |
| 6- | விதியை அதாவது இன்பமும் துன்பமும் இறை ஏற்பாட்டின்படியேதாம் என நம்புதல் |

**சிந்தனைக்குச் சில**

- மரணத்திற்குப் பின்பு எழுப்புதல் உள்ளது என்பதை மறுப்பவனைப் பற்றிய சட்டமென்ன?
- அல்லாஹ்வையும் மலக்குகளையும் நம்பி இறைத்தூதர்களை மட்டும் நம்பாதவன் மு.ஃமினாக முடியுமா?

**மூன்றாவதாக**

## உழூ செய்தல் (செய்முறை)

நான் உழூவை நடைமுறைப்படுத்திப் பார்க்கின்றேன்!

**நான்காவதாக**

## தொழுகை (செய்முறை)

நான் தொழுகைக்குரிய அசைவுகளை மட்டும் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும் நான் தொழுகையின் அனைத்துக் கட்டங்களிலும் ஓதுவதற்காக ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், லா இலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர் ஆகிய வாசகங்களை மனனமிடுவேன். இது தொழுகையின் அந்தந்த இடங்களில் ஓதப்பட வேண்டிய வாசகங்களை முறையான நான் கற்றுக்கொள்ளும் வரைதான்.

## ((சுயப்பரிசோதனை))

### கீழ்க்காணும் வாசகங்களைச் ☑சரியா ☒தவறா என அடையாளமிடுகின்றேன்

- ☐ தொழுகையை விட்டவன் இஸ்லாத்தின் அடிப்படையில் ஒன்றை விட்டவனாவான்.
- ☐ விதியை மறுத்தவன் ஈமானுடைய கடமைகளில் ஒன்றை ஏற்காதவன்.
- ☐ ஒரு முஸ்லிம் கடமையான தொழுகைகளை முறையாக நிறைவேற்றுவான்.
- ☐ ஷஹாதா கலிமாவை மொழிவது இஸ்லாத்தில் நுழைவதற்கான முதல் நடவடிக்கையாகும்.
- ☐ ஹஜ் செய்வது இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும்.

### புள்ளிகளிடப்பட்ட இடத்தை நிரப்புக:

**ஈமானுடைய அடிப்படை அம்சங்கள்:**

..................... நம்புவது

..................... நம்புவது

..................... நம்புவது

..................... நம்புவது

..................... நம்புவது

..................... நம்புவது

இரண்டாவது பாடம்

# உளூவும் குளிப்பும்

## பாடத்தின் நோக்கங்கள்

இந்தப் பாடம் முடியும் போது மாணவரிடம் எதிர்பார்க்கப்படும் அம்சங்கள்:

1. உளூவின் அம்சங்களை முழுமையாக வரிசை படுத்திச் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும்.
2. உளூவை முறைப்படி செயல்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.
3. உளூவை முறிக்கும் காரியங்களில் ஏதேனும் நான்கைத் தெரிந்திருக்க வேண்டும்.
4. காலுறை-காலணிகளின் மீது ஈரக்கையால் தடவுவது பற்றிய சட்டங்களைத் தெரிந்திருக்க வேண்டும்.
5. குளிப்பின் முறையைத் தெரிந்திருக்க வேண்டும்.
6. குளிப்பைக் கடமையாக்கும் காரியங்களை விளக்க வேண்டும்.

## கற்பிக்கப்படுவதற்குத் தேவையான காலப் பங்கீடு

| தலைப்பு | காலம் (நிமிடங்கள்) |
|---|---|
| உளூ | 24 |
| காலுறைகளின் மீது மஸஹ் செய்தல் | 10 |
| குளிப்பின் முறையும் அதைக் கடமையாக்கும் காரணங்களும் | 25 |
| உளூ மற்றும் தொழுகையின் முறையைச் செயல்முறைப் படுத்தல் | 15 |
| நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதை உறுதி செய்தல் | 15 |

## கற்பிப்பதற்கான உபகரணங்கள்:

1. உளூவின் முறையை விளக்கும் வீடியோ காண்பித்தல்
2. உளூவின் முறையைப் பற்றிய படங்கள்
3. உளூவை முறிக்கும் காரியங்கள் மற்றும் குளிப்பைக் கடமையாக்கும் காரியங்கள் அடங்கிய பதாகைகள்
4. உளூவின்றி செய்யக்கூடாத காரியங்கள் மற்றும் குளிப்பு கடமையானவர் செய்யக்கூடாத காரியங்கள் ஆகிய இரண்டிற்குமிடையே ஒப்புநோக்கப்பட்ட பட்டியல்

முதலாவதாக

## உழூ

### அ- உழூவின் சிறப்பு:

உளூவின் சிறப்பைப் பற்றி கூறும் அநேக ஹதீஸ்கள் உள்ளன. அவற்றில் ஒன்று: "யார் முறையாக உளூ செய்கின்றாரோ அவருடைய உடம்பிலிருந்து அவருடைய நகங்களின் வழியாகவும் அவரது பாவங்கள் வெளியேறும்!" என்பது நபிமொழி. (முஸ்லிம்)

### ஆ- அதன் செயல்முறை

| | |
|---|---|
| 1. | உளூ செய்வதாக மனதில் நிய்யத் செய்ய வேண்டும். |
| 2. | பிஸ்மில்லாஹ் கூற வேண்டும் |
| 3. | முன் கைகளை மூன்றுமுறை கழுவ வேண்டும் (பார்க்க: படம் -1) |

1 முன்கைகளைக் கழுவும் படம்



4. மூன்று முறை வாய்க்கொப்பளிக்க வேண்டும் (பார்க்க: படம் -2)

2 முன்கைகளைக் கழுவும் படம்



5. மூன்று முறை மூக்குக்குத் தண்ணீர் செலுத்தி சீந்த வேண்டும் (பார்க்க: படம் -3)

3 மூக்கைச் சீந்தும் படம்



6. மூன்று முறை முகம் கழுவ வேண்டும், முன்னெற்றி ரோமப்பகுதியிலிருந்து தொண்டைக்குழி வரை நீளவாக்கிலும் ஒரு காதிலிருந்து மறு காது வரை அகலவாக்கிலும் (பார்க்க: படம்-4) தாடி குறைவாக இருந்தால் அதன் அடிப்பாகம் வரை கழுவ வேண்டும். அடர்த்தியாக இருந்தால் கோதிக்கழுவ வேண்டும். (பார்க்க: படம் -5)



4 முகத்தைக் கழுவும் படம்

7. இரு கைகளையும் முழங்கை உட்பட மும்முறை கழுவ வேண்டும். (பார்க்க: படம் -6, **A, B**)



5-A வலது கையைக் கழுவும் படம்

5-B இடது கையைக் கழுவும் படம்



8. தலையை ஒரு முறை மஸஹ் - ஈரக்கையால் தடவ வேண்டும். தலையின் முன்னெற்றியிலிருந்து பிடரி வரை, பின்பு அவ்வாறே மீட்டுக்கொண்டு முன் பக்கமாக வர வேண்டும். (பார்க்க: படம் -6 - **A, B**)



6-A தலையின் முன்பகுதியைத் தடவும் படம்

6-B தலையின் பின்பகுதியைத் தடவும் படம்



9. காதுகளை ஈரக்கையால் தடவ வேண்டும். ஆட்காட்டி விரலை காதின் உட்பகுதி வரை நுழைத்து பெருவிரலால் வெளிப்பகுதியையும் தடவ வேண்டும். (பார்க்க: படம் -7)

7 காதுகளைத்தடவும் படம்



| | |
|---|---|
| 10. | இரு கால்களையும் கரண்டை உட்பட மும்முறை கழுவ வேண்டும். (பார்க்க: படம் -8, **A, B**) |



8-A வலது காலைக் கழுவும் படம்

8-B இடது காலைக் கழுவும் படம்



## உளூவை முறிக்கும் காரியங்கள்

அவை ஐந்தாகும்:

| | |
|---|---|
| 1. | மல-ஜல துவாரங்கள் வழியாக ஏதேனும் வெளிப்பட்டால், சிறுநீர், மலம், காற்று, இச்சை நீர்[1], வெள்ளை[2] ஆகியவற்றைப் போல. |
| 2 | முன்பின் துவாரங்களல்லாமல் வேறு வழியாக இரத்தமோ மல-ஜலமோ மூக்கிலிருந்து அதிகப்படியான இரத்தமோ வெளியேறினால் |
| 3 | சுய நினைவு நீங்குதல்: ஆழ்ந்த உறக்கமோ பைத்தியமோ மருந்து அல்லது நீரழிவு நோயின் காரணமாக மயக்கமோ ஏற்பட்டாலும் சரியே! |
| 4 | மறைவிடத்தை திரையின்றி தொடுதல் |
| 5 | ஒட்டக இறைச்சியை உண்ணல் |

[1] உடலுறவைப் பற்றி சிந்திக்கும்போது அல்லது தம்பதிகள் விளையாடிக் கொண்டிருக்கும்போது வெளிப்படும் பிசுபிசுப்பான வெள்ளைத்திரவம்.
[2] சிறுநீர் கழித்த பின்னர் வெளியாகும் கட்டியான வெள்ளைத் திரவம்.

## ஈ- உளூவின்றி செய்யக்கூடாத காரியங்கள்:

| | |
|---|---|
| 1. | தொழுகை |
| 2. | தவாஃபு செய்தல் (கஃபாவை வலம்வருதல்) |
| 3. | குர்ஆனைத் திரையின்றி தொடுதல் |

**சிந்தனைக்குச் சில**

- ஒருவர் உளூ செய்துவிட்டு சிறிது நேரம் அமர்ந்தவாறு உறங்கிவிட்டார். அவருடைய உளூ முறியுமா?
- உளூ செய்த ஒருவர் திரைக்கு மேலால் தமது மறைவிடத்தைத் தீண்டிவிட்டார். அவரது உளூ முறியுமா?
- உளூ செய்த ஒருவர் ஆட்டுக் கறி சாப்பிட்டுவிட்டார், அவருடைய உளூ முறியுமா?
- ஒருவர் உளூ செய்யும்போது தமது கால்களைக் கழுவிவிட்டு பிறகு முகத்தைக் கழுவிவிட்டு தலைக்கு மஸஹ் செய்தபின் கைகளைக் கழுவுகிறார் எனில் அவர் செய்த தவறு யாது?

இரண்டாவதாக

## காலணி, காலுறைகளுக்கு மஸஹ் செய்தல்

கால்களில் அணியப்படுபவை: தோல் போன்ற பொருளினால் தயாரிக்கப்பட்டதை (குஃப்) காலணி என்றும் கம்பளி, பருத்தி, சணல் போன்றவற்றால் தயாரிக்கப்பட்டதை (ஜவ்ரப்) காலுறை என்றும் குறிப்பிடுகின்றோம்.

### அ. மார்க்க அனுமதி

ஒருவன் காலணிகள் அல்லது காலுறைகளை அணிந்துகொண்டு உளூ செய்ய நாடினால், காலுறைகளின் மேற்பகுதியில் மஸஹ் செய்யலாம், கீழ்க்காணும் நிபந்தனைகளுடன்:

1. அவ்விரண்டையும் உளூ செய்து துப்புறவான பின்பு அணிந்திருக்க வேண்டும்.
2. கரண்டைக்கால் வரை மறைக்கின்ற அளவுக்கு அவை அமைந்திருக்க வேண்டும்.

### ஆ. மஸஹ் செய்யும் முறை

கையை நீரால் ஈரப்படுத்திய பிறகு கைவிரல்களால் காலுறைகளின் மேற்பரப்பின் பெரும்பகுதியைத் தடவ வேண்டும். (பார்க்க: படம் 9)

9 காலணி,காலுறைகளின் மீது தடவும் படம்



## இ- கால அளவு

ஊரிலிருப்பவர் ஒரு பகலும் ஓர் இரவும் காலுறைகளின் மீது மஸஹ் செய்யலாம் (24 மணி நேரம்)

பயணத்திலிருப்பவர், மூன்று இரவுகளும் மூன்று பகல்களும் (72 மணி நேரம்) மஸஹ் செய்துகொள்ளலாம். இந்தக் கால அவகாசம், உழூ முறிந்த பின் செய்யும் உழூவின்போது முதல் முறையாக மஸஹ் செய்வதிலிருந்து தொடங்குகிறது.

## ஈ- அதை முறிக்கக் கூடியவை

| | |
|---|---|
| 1 | காலக்கெடு முடிவடைதல் |
| 2 | குளிப்பைக் கடமையாக்கக்கூடியவை. (அதைப் பற்றிய விவரம் பின்னர் வரும்) |
| 3 | காலணிகள் அல்லது காலுறைகளைக் கழற்றுதல் |

**சிந்தனைக்குச் சில**

- ஒருவர் உழூ செய்தபின் காலுறைகளை அணிந்தார். பிறகு அவற்றைக் கழற்றிவிட்டு பிறகு அணிந்துகொண்டார். அவருக்கு மஸஹ செய்யும் அனுமதியுண்டா?
- ஒருவர் காலுறைகளின் மேற்பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் மஸஹ் செய்கிறார் எனில் அவருக்கு நீங்கள் கூறுவதென்ன?

மூன்றாவதாக

## குளிப்பு

### அ- முழுமையான குளிப்பின் முறை

| | |
|---|---|
| 1 | தூய்மையாகுவதற்காகக் குளிப்பதாக நிய்யத் செய்ய வேண்டும். |
| 2 | பிஸ்மில்லாஹ் கூற வேண்டும். |
| 3 | கைகளை மூன்று முறை கழுவ வேண்டும். |
| 4 | மறைவிடத்தைக் கழுவ வேண்டும். |
| 5 | தொழுகைக்காக உழூ செய்வதைப்போல முழுமையாக உழூ செய்ய வேண்டும். தலையில் மூன்று முறை தண்ணீர் ஊற்றி மயிர்க்கால்களை நனைக்க வேண்டும். பிறகு இரு கால்களையும் கழுவ வேண்டும். குளிப்பு முடியும்வரை கால்களைக் கழுவுவதைப் பிற்படுத்தவும் செய்யலாம். |
| 6 | உடம்பின் ஏனைய பகுதிகளிலும் தண்ணீர் ஊற்ற வேண்டும். முதலில் வலது புறமாகவும் பிறகு இடது புறமாகவும் தண்ணீர் ஊற்ற வேண்டும். அப்போது அக்குள், காதுகளின் உட்பகுதி, தொப்புள் முதலான உடம்பின் தேய்த்துக் கழுவ முடியுமான இடுக்குப் பகுதிகளில் தேய்த்துக்கழுவ வேண்டும். |

### ஆ- சராசரி குளிப்பின் முறை

தூய்மையாகுவதற்காக குளிப்பதாக எண்ணிக் கொண்டு பிஸ்மில்லாஹ கூறி உடம்பில் தண்ணீர் ஊற்றி நனைக்க வேண்டும். வாயை, வாய்கொப்பளிப்பதன் மூலமும் மூக்கை, மூக்குக்குத் தண்ணீர் செலுத்தி சிந்துவதன் மூலமும் சுத்தம் செய்ய வேண்டும்.

## இ- குளிப்பைக் கடமையாக்குபவை

| | |
|---|---|
| 1 | உடலுறவு, கனவு, சுய இன்பம், காமப்பார்வை போன்றவற்றின் மூலமாக இன்பம் காணும் விதமாக இந்திரியம் குதித்து வெளியேறல் |
| 2 | ஆண்-பெண்ணின் மறைவிடங்கள் சந்தித்தல் - அதனால் இந்திரியம் வெளியாகாவிட்டாலும் சரியே! |
| 3 | மாதவிடாய் மற்றும் மகப்பேறு இரத்தம் வெளியாகுதல் - ஆயினும் இரத்தப்போக்கு நின்ற பிறகுதான் குளிக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். |
| 4 | மாற்றுமதத்தினர் இஸ்லாமைத் தழுவுதல் |
| 5 | மரணித்தல் - போர்க்களத்தில் ஷஹீதானவரைத் தவிர. |

## ஈ- குளிப்பு கடமையானவர் செய்யக்கூடாதவை

| | |
|---|---|
| 1 | தொழுகை |
| 2 | கஃபாவைத் தவாஃபு செய்தல் |
| 3 | குர்ஆனைத் தொடுதல் |
| 4 | குர்ஆனை ஓதுதல் |
| 5 | பள்ளியில் தங்குவது, உளூ செய்திருந்தாலே தவிர. |

## உ- மாதவிடாய் மற்றும் பேற்றுத் தொடக்குள்ள பெண்கள் செய்யக்கூடாதவை

| | |
|---|---|
| 1 | தொழுகை (பிறகு களா செய்ய வேண்டியதுமில்லை) |
| 2 | நோன்பு (ரமளான் நோன்பைப் பிறகு களா செய்ய வேண்டும்) |
| 3 | க.்.பாவை வலம் வருதல் |
| 4 | மஸ்ஜிதில் தங்குதல் |
| 5 | குர்ஆனைத் தொடுதல் (குர்ஆனை ஓதலாம், குர்ஆனைத் திரையுடன் தொடலாம்) |
| 6 | உடலுறவு |

**சிந்தனைக்குச் சில**

- ஒருவர் மனைவியுடன் உறவுகொண்டுவிட்டு குர்ஆனை ஓத விரும்புகிறார். அவர் இப்போது கட்டாயமாகச் செய்ய வேண்டியது என்ன?
- ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்டு தொழுகை நேரத்திற்கு சற்று முன்பு நின்றுவிட்டது. இப்போது அவள் செய்ய வேண்டியது என்ன?

**நான்காவதாக**

## காலுறைகளின் மீது மஸஹ் செய்தல் - செய்முறை

**ஐந்தாவதாக**

## உழூவும் தொழுகையும் - செயல் முறை – மீள்பார்வை

## மாதவிடாய், பெரும்போக்கு, பேற்றுத் தொடக்கு ஆகியவற்றின் சட்டங்கள்

| | பேற்றுத்தொடக்கு | பெரும்போக்கு | மாதவிடாய் |
|---|---|---|---|
| விளக்கம் | குழந்தைப் பேற்றுக்கு முன்போ பின்போ கர்ப்பினிக்கு வெளியாகும் இரத்தம் | தொடர்ந்து சிவப்பாக வெளியேறும் குருதி. மாதவிடாய் இரத்தத்திலிருந்து நிறம், திடம், மணம் ஆகியவற்றில் வேறுபடும் | பெண்ணின் கர்ப்பப் பையிலிருந்து இயல்பாக வெளியாகும் கட்டியான இரத்தம் |
| வெளியாகும் நேரம் | குழந்தைப் பிறக்கும்போது அல்லது ஒன்று, இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு | குறிப்பிட்ட நேரம் எதுவுமில்லை. எப்போதாவது இடையிடையே பெண்களுக்கு ஏற்படக்கூடியது | பெரும்பாலும் ஒன்பதாம் வயதிலிருந்து ஐம்பதாம் வயது வரை |
| காலஅளவு | அதிகபட்சமாக 40 தினங்கள். குறைந்த பட்சத்திற்கு அளவுஇல்லை | குறிப்பிட்ட கால அளவு இல்லை | குறைந்தளவு மாதாந்திரம் ஒருபகலும் ஓர் இரவும். பெரும்பாலும் ஆறு அல்லது ஏழு நாட்கள். அதிகபட்சமாக 15 நாட்கள் |
| கடமை | (1) நின்றவுடன் குளித்தல் (2) நோன்பைக் களா செய்தல் | ஒவ்வொரு தொழுகைக்கும் தனியாக உளூ செய்தல் | (1) நின்றவுடன் குளித்தல் (2) நோன்பைக் களா செய்தல் |
| தடுக்கப் பட்டவை | (1)தொழுகை (2)நோன்பு (3)தவாஃபு (4)குர்ஆனைத் திரையின்றி தொடுதல் (5)மஸ்ஜிதில் தங்குதல் (6)உடலுறவு | தடுக்கப்பட்டவை எதுவுமில்லை | (1)தொழுகை (2)நோன்பு (3)தவாஃபு (4)குர்ஆனைத் திரையின்றி தொடுதல் (5)மஸ்ஜிதில் தங்குதல் (6)உடலுறவு |
| சட்டங்கள் | (1)அன்றாட வேலைகளைச் செய்யலாம் (2) உடலுறவின்றி சேர்ந்து படுக்கலாம் | தவாஃபுசெய்யவோ மஸ்ஜிதில் தொழவோ நாடினால் ஆடையில் இரத்தம்படாத வகையில் துணி போன்ற நீரை உறிஞ்சும்பொருளை வைத்துக்கொள்ள வேண்டும் | (1)தலாக்கின்போது பெண் கணக்கிட்டுக் கொள்வாள். (2)அன்றாட வேலைகளைச் செய்யலாம் (3) கணவனுடன் உடலுறவின்றி சேர்ந்து படுக்கலாம் |

## ((சுயபரிசோதனை))

### கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்

1- குளிப்பைக் கடமையாக்கும் காரியங்கள் யாவை?

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

2- குளிக்கும் முறையை விளக்குக:

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

3- குளிப்பு கடமையானவன் தொழுகை மற்றும் தவா:.பு செய்யலாமா?

........................................................................

4- உளூவை முறிக்கும் காரியங்கள் யாவை?

........................................................................

........................................................................

........................................................................

### கீழ்க்காணும் வாசகங்களைச் ☑சரியா ☒தவறா அடையாளமிடுக:

- ☐ ஒருவர் உளூசெய்யும்போது தலைக்கு மஸஹ் செய்துவிட்டு கைகளை முழங்கை வரை கழுவுகிறார்
- ☐ உளூ செய்தபின் காற்று வெளியேறினால் உளூவை மீண்டும் செய்துவிட்டுத்தான் தொழ வேண்டும்
- ☐ ஏற்கனவே உளூ செய்துவிட்டு காலுறைகளை அணிந்திருந்தால்தான் அவற்றின்மீது மஸஹ்செய்யலாம்

மூன்றாவது பாடம்

# தொழுகையும் அல்ஃபாத்திஹா அத்தியாய மனப்பாடமும்

## பாடத்தின் நோக்கங்கள்

பாடம் நடத்தி முடிக்கப்பட்ட பின்பு மாணவரிடம் எதிர்பார்க்கப்படுபவை:

1. தொழுகையின் முக்கியத்துவத்தை விளக்கும் நான்கு அம்சங்களைக் குறிப்பிட வேண்டும்
2. தொழுகையின் சிறப்புகளில் ஒன்றை விளக்க வேண்டும்
3. கடமையான தொழுகைகளின் ரக்அத்துகளுடைய எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும்
4. அனைத்துத் தொழுகைகளின் நேரங்களைக் குறிப்பிட வேண்டும்
5. ஸூரத்துல் ஃபாத்திஹாவை மனப்பாடமாக ஓதுவது
6. உளூ மற்றும் தொழுகையை செயல்முறைப்படுத்தல்

## பாடம் கற்பிக்கப்படுவதற்கான காலப்பங்கீடு

| தலைப்புகள் | நேரம்(நிமிடம்) |
|---|---|
| தொழுகையின் சிறப்பும் முக்கியத்துவமும் | 10 |
| கடமையான தொழுகைகளின் ரக்அத்களுடைய எண்ணிக்கை | 20 |
| சூரத்துல்ஃபாத்திஹா மனப்பாடம் செய்வித்தல் | 25 |
| உளூ மற்றும் தொழுகை நடைமுறை மீள்பார்வை | 20 |
| நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்துதல் | 15 |

## கற்பிப்பதற்குத் தேவையான உபகரணங்கள்

1- தொழுகையின் சிறப்பைப் பற்றிய கருத்துக்களைக் கொண்ட ஸ்டிக்கர்கள்

2- தொழுகையின் ரக்அத்கள் மற்றும் நேரங்களைக்கொண்ட அட்டவணை

3- சூரத்துல்ஃபாத்திஹா கற்றுக்கொடுப்பதற்குத் தகுந்த கேஸட் பீஸ்.

முதலாவதாக

## தொழுகையின் முக்கியத்துவமும் சிறப்பும்

தொழுகைக்கு இஸ்லாமிய மார்க்கத்தில் மகத்தான முக்கியத்துவங்கள் உள்ளன:

- ✓ இஸ்லாமின் ஐம்பெருங்கடமைகளில் இரண்டாவது கடமை
- ✓ இஸ்லாத்தின் இன்றியமையா தூண்
- ✓ வணக்கங்களில் முதன்முதலாகக் கடமையாக்கப்பட்டது
- ✓ முஸ்லிமை, இரட்சகனோடு தொடர்புபடுத்தும் அன்றாட கட்டாய வழிபாடு
- ✓ இஸ்லாமியப் புனிதச் சின்னங்களில் வெளிப்படையானது
- ✓ மறுமைநாளில் முதன்முதலில் ஓர் அடியான் விசாரிக்கப்படுவது இதைப் பற்றித்தான். இது சரியாக இருந்தால் ஏனைய எல்லா காரியங்களும் சரியாகிவிடும். இது சரியில்லையெனில் ஏனைய எல்லா காரியங்களும் கெட்டுவிடும்

தொழுகையின் சிறப்பைக் குறித்த அநேக ஹதீஸ்கள் உள்ளன. அவற்றில் ஒன்று:

அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "உங்களில் ஒருவருடைய வீட்டு வாயிலுக்கருகே ஓர் ஓடையிருந்து அதில் அவர் தினமும் ஐந்துவேளை குளித்தால் அவருடைய உடம்பில் அழுக்கு ஏதேனுமிருக்குமா?" என நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு தோழர்கள், 'அழுக்கு அறவே இருக்காதே!' என்றதும், அதே போன்றுதான் ஐவேளைத் தொழுகைகளும். அவற்றைக்கொண்டு அல்லாஹ் பாவங்களை அழிக்கிறான்" என்று அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள். (புகாரீ, முஸ்லிம்)

இரண்டாவதாக

## கடமையான தொழுகைகள் (ரக்அத்களும் நேரங்களும்)

ஓர் இரவு ஒரு பகல் முழுமைக்கும் ஐந்துவேளை தொழுகைகளை அல்லாஹ் தனது அடியார்கள் மீது கடமையாக்கியுள்ளான். அவை: பஜ்ர் தொழுகை, ளுஹர் தொழுகை, அஸர் தொழுகை, மக்ரிப் தொழுகை, இஷா தொழுகை. இவற்றைக் குறிப்பிட்ட நேரங்களில் தொழுவது கடமையாகும். அல்லாஹ் கூறுகிறான்: நிச்சயமாகத் தொழுகை நேரம் குறிப்பிடப்பட்ட கடமையாகும், *(4:103)*

**கடமையான தொழுகைகளின் பெயர்கள், ரக்அத்கள், நேரங்கள் அட்டவணையில் தெளிவாக்கப்பட்டுள்ளன.**

**கடமையான தொழுகைகளின் ரக்அத்கள் மற்றும் நேரங்களின் அட்டவணை**

| தொழுகை | ரக்அத் | நேரம் |
|---|---|---|
| ஃபஜ்ர் | 2 | அதிகாலை உதயமானதிலிருந்து சூரியன் உதிக்கும் வரை |
| ளுஹர் | 4 | சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்ததிலிருந்து ஒரு பொருளின் நிழல் உச்சி சாய்ந்த நிழல் போக, அப்பொருளைப் போன்ற அளவுக்கு வரும் வரை |
| அஸர் | 4 | ளுஹருடைய நேரம் முடிந்ததிலிருந்து சூரியன் மஞ்சணிக்கும் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட நேரம். அதிலிருந்து சூரியன் மறையும் வரையும் தொழலாம் |
| மக்ரிப் | 3 | சூரியன் மறைந்ததிலிருந்து செவ்வானம் மறையும் வரை |
| இஷா | 4 | செவ்வானம் மறைந்ததிலிருந்து பாதி இரவு வரை |

**சிந்தனைக்குச் சில**

- சூரியன் உச்சியிலிருந்து சாயும் முன் ஒருவர் ளுஹர் தொழுகின்றார், அவருடைய தொழுகை நிறைவேறுமா?
- இரவின் இறுதிப்பகுதியில் ஒரு பெண் உறங்கி பிறகு சூரியன் உதித்து உயர்ந்தபின் எழுகின்றாள் எனில் அப்பெண்ணுக்கு என்ன சொல்வீர்கள்?
- தொழுகையின் சிறப்புகளில் இங்கு குறிப்பிடப்பட்டது அல்லாமல் வேறு ஏதேனும் உங்களுக்குத் தெரியுமா?

மூன்றாவதாக

## அல்ஃபாத்திஹா அத்தியாயம் (மனப்பாடம்)

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம். அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். அர்ரஹ்மானிர்ரஹீம். மாலிகி யவ்மித்தீன். இய்யாக்க நஃபுது வ இய்யாக நஸ்தயீன். இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் கைரில் மக்ழுபி அலைஹிம் வலல்லால்லீன்

நான்காவதாக

## உளூவும் தொழுகையும் செயல்முறை

1- உளூ செய்முறை

2- தொழுகை - செய்முறை - இரு முறைகள் அல்லது அதற்கு அதிகமாக

3- ஜமாஅத்தோடு தொழுகையை நிறைவேற்றுதல் மற்றும் மக்கள் தொழுகையை நிறைவேற்றுவதைக் கண்ணாரக் காண்பதற்காக மஸ்ஜிதிற்குச் செல்லல்

## ((சுய பரிசோதனை))

### சூரத்துல்ஃபாத்திஹா ஓதல்

### சரியான எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும்

இஷா தொழுகையின் ரக்அத்கள் ______

ஃபஜ்ர் தொழுகையின் ரக்அத்கள் ______

ளுஹர் தொழுகையின் ரக்அத்கள் ______

அஸர் தொழுகையின் ரக்அத்கள் ______

மக்ரிப் தொழுகையின் ரக்அத்கள் ______

### புள்ளியிடப்பட்ட இடத்தைப் பூர்த்திசெய்க:

(1) மக்ரிப் தொழுகையின் நேரம் .................................................... .

(2) ளுஹர் தொழுகையின் நேரம் .................................................... .

(3) ஒரு முஸ்லிம் ஒவ்வொரு நாளும் .................... வேளை தொழுகைகளை நிறைவேற்ற வேண்டும்.

### தொழுகையின் சிறப்பைக் குறிக்கும் ஹதீஸ்களில் ஒன்றைக் குறிப்பிடுக!

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

### கீழ்க்காணும் வாசகங்களைச் ☑சரியா ☒தவறா அடையாளமிடுக:

- [ ] தொழகையின் மூலம் அல்லாஹ் பாவங்களை அழிக்கிறான்
- [ ] அஸர் தொழுகையின் நேரம், ளுஹர் தொழுகை முடிந்ததிலிருந்து சூரியன் மஞ்சணிக்கும் வரை
- [ ] பஜ்ரு தொழுகையின் நேரம், இரண்டாம் வைகறை உதயமானதிலிருந்து ளுஹர் தொழுகை வரை
- [ ] தினமும் ஐந்து வேளைகள் தொழ வேண்டும் என அடியார்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்

நான்காவது பாடம்

# தொழுகை முறையும் தஷஹ்ஹுத் மனப்பாடமும்

## பாடத்தின் நோக்கங்கள்

பாடம் நடத்தி முடிக்கப்பட்ட பின்பு மாணவரிடம் எதிர்பார்க்கப்படுபவை:

1- தொழுகைக்கு முன்பு தேவையானவற்றை வரிசைப்படுத்துதல்
2- தொழுகையின் முறையை விளக்குதல்
3- தொழுகையை அதன் செயல்கள் மற்றும் அதில் ஓதவேண்டியவற்றுடன் நிறைவேற்றல்
4- தஷஹ்ஹுதை மனப்பாடமாக ஓதல்

## பாடம் கற்பிக்கப்படுவதற்கான காலப்பங்கீடு

| தலைப்பு | நேரம்(நிமிடம்) |
|---|---|
| தொழுகை முறையை செய்து காண்பித்தல் | 25 |
| தொழுகை முறையை செயல்படுத்துதல் | 20 |
| தஷஹ்ஹுதை மனப்பாடம் செய்ய ஓதல் | 30 |
| நோக்கங்கள் நிறைவேறியதா என்று உறுதிசெய்தல் | 15 |

## கற்பிப்பதற்குத் தேவையான உபகரணங்கள்

1 தொழுகை முறையை வீடியோ மூலம் காண்பித்தல்
2 தொழுகை முறையயை விளக்கும் படங்கள்
3 தஷஹ்ஹுதைக் கற்பிக்கும் கேஸட்
4 தொழுகையின் துஆக்கள் அடங்கிய அட்டவணை

முதலாவதாக

## தொழுகை முறை

### தொழும் முன்பு

நான் தொழ நாடினால் செய்ய வேண்டியவை:

- தொழுகைக்குரிய நேரம் வந்துவிட்டதை உறுதிசெய்தல் (தொழுகை நேரங்கள் முன்பு கூறப்பட்டுள்ளது)
- சிறிய மற்றும் பெரிய தொடக்குகளிலிருந்து சுத்தமாகுதல்[1]
- உடல், உடை, தொழுமிடம் ஆகியவற்றைச் சுத்தமாக வைத்திருத்தல்
- உடம்பின் மறைக்கப்பட வேண்டிய பகுதிகளை மறைத்தல்
- கிப்லாவை அதாவது க.்.பாவை முன்னோக்குதல்
- நிய்யத் - மெற்கொள்ளவிருக்கும் வணக்கத்தைப் பற்றி மனதில் நினைத்தல்
- நின்று தொழுவதற்கு சக்தி இருக்கும்போது நிற்றல்

### தொழுகையை நிறைவேற்றல்

தொழுகையின் அசைவுகளை முதலில் பார்க்கலாம்:

1- தக்பீரதுல் இஹ்ராம் - முதலாவது தக்பீராகிய 'அல்லாஹு அக்பர்' கூற வேண்டும், சுஜூதுடைய இடத்தைப் பார்த்தவண்ணம்.

(1) பெருந்தொடக்கு என்பது குளிப்பைக் கடமையாக்கக்கூடிய காரியமாகும். சிறுதொடக்கு என்பது உளூவை முறிக்கும் காரியமாகும

2- தக்பீர் தஹ்ரீமாவின்போது இரு கைகளையும் புஜங்களுக்கு நேராகவோ அல்லது காதுகளுக்கு நேராகவோ உயர்த்த வேண்டும் (பார்க்க படம்: 1,2)



1 புஜங்களுக்கு நேராக கைகளை உயர்த்துதல்

2 காதுகளுக்கு நேராக கைகளை உயர்த்துதல்



3- வலது கையை இடது கை மீது வைத்து அவற்றை நெஞ்சில் வைக்க வேண்டும் (பார்க்க: படம் -4)



3 கைகளை நெஞ்சில் வைப்பதன் முன்புறத் தோற்றம்

4 கைகளை நெஞ்சில் வைப்பதன் பக்கத் தோற்றம்



4. முதல் துஆவை ஓத வேண்டும்:

ஸுப்ஹானகல்லாஹும்ம வ பிஹம்திக வ தபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலா இலாஹ கைருக

5. பிறகு அவூது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர்ரஜீம்" பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்று ஓதிவிட்டு சூரத்துல் ஃபாத்திஹாவை ஓத வேண்டும். ஓதி முடிந்ததும் ஆமீன் என்று சப்தமிட்டு ஓதப்படும் தொழுகையில் சப்தமிட்டும் மற்றவற்றில் சப்தமிடாமலும் கூற வேண்டும்.

6. பிறகு குர்ஆனிலிருந்து தெரிந்ததை ஓத வேண்டும்.

7. ருகூவுக்காக தக்பீர் கூறியவாறு குனிய வேண்டும்.

1) இரு கைகளையும் புஜங்களுக்கு நேராகவோ அல்லது காதுகளுக்கு நேராகவோ உயர்த்த வேண்டும் (பார்க்க படம்: 1,2)
2) தலையை முதுகுக்குச் சமமாக வைத்துக்கொண்டு பார்வை சுஜூதின் இடத்தில் இருக்க வேண்டும்
3) விரல்கள் விரிக்கப்பட்ட நிலையில் மூட்டுக்கால்களில் கைகளை வைக்க வேண்டும்
4) ருகூவில் சற்று நிதானத்தைக் கடைப்பிடித்து 'ஸுப்ஹான ரப்பியல் அளீம்' என்று மும்முறையோ அதற்கு அதிகமாகவோ கூற வேண்டும். (பார்க்க: படம் -5)

5 ருகூவு செய்யும் படம்



8. ருகூவிலிருந்து தலையை உயர்த்த வேண்டும்
   1) இரு கைகளையும் புஜங்களுக்கு நேராகவோ அல்லது காதுகளுக்கு நேராகவோ உயர்த்த வேண்டும் (பார்க்க படம்: 1,2)
   2) ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ் கூறியவாறு. (தனியாகவோ அல்லது இமாமாகவோ தொழுதால்)
   3) எழுந்திருக்கும்போது "ரப்பனா லகல் ஹம்த்" கூற வேண்டும்

9. தக்பீர் கூறியவாறு ஸஜ்தா செய்ய வேண்டும்
   ஸஜ்தாவின்போது ஏழு உறுப்புகள் தரையில்பட வேண்டும்:
   (1) மூக்குடன் நெற்றி
   (2,3) இரு கைகள்
   (4,5) இரு மூட்டுக்கால்கள்
   (6,7) இரு கால்விரல்களின் உட்பகுதி கிப்லாவை நோக்கியிருத்தல்
   அப்போது ஸுப்ஹான ரப்பியல் அஃலா என்று மும்முறை அல்லது அதற்கு அதிகமாக ஓத வேண்டும். (பார்க்க: படம் 6,7)



6 ஸுஜூதின் முன்புறத் தோற்றம்



7 ஸுஜூதின் பின்பக்கத் தோற்றம். அப்போது கால்விரல்கள் வைக்கப்படும் முறை

10. தக்பீர் கூறியவாறு தலையை உயர்த்த வேண்டும்
   (1) இடதுகால் பாதத்தை விரித்து அதன் மீது அமர வேண்டும்
   (2) வலது காலை நட்டி வைக்க வேண்டும்
   (3) இரு கைகளையும் இரு தொடைகளிலும் இரு மூட்டுக்கால்களிலும் வைக்க வேண்டும்
   (4) ரப்பிக்.்.பிர்லீ என்று கூற வேண்டும்
   (5) அமர்ந்து அமைதி பெற வேண்டும் (பார்க்க: படம் - 8,9)



8 அமர்வின் முன்புறத் தோற்றம். கைகள் தொடைகளிலோ முழங்கால்களிலோ வைக்கும் முறை

9 ஸுஜூதின் பின்பக்கத் தோற்றம். அப்போது கால்விரல்கள் வைக்கப்படும் முறை



11. தக்பீர்கூறியவாறு இரண்டாவது ஸஜ்தா செய்ய வேண்டும். அதில் முதல் ஸஜ்தாவில் செய்தது போலவே செய்ய வேண்டும்

12. பிறகு தக்பீர் கூறியவாறு இரண்டாவது ரக்அத்திற்காக எழுந்து அதில் முதல் ரக்அத்தில் செய்ததுபோல செய்ய வேண்டும்.

13. பிறகு இரண்டாவது ஸஜ்தாவிலிருந்து எழுந்து அமர வேண்டும். அதில் தஷஹ்ஹுதும் ஸலவாத்தும் ஓத வேண்டும்.

14. பிறகு வலது புறம் 'அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹ்' என ஸலாம் கூற வேண்டும் பிறகு இடது புறமும் அவ்வாறு செய்ய வேண்டும். இவ்வாறு தொழுகையிலிருந்து வெளியேற வேண்டும். இது இரு ரக்அத் தொழுகையாக இருந்தால்தான். (பார்க்க: படம் - 10,11)



10 வலதுபுறம் ஸலாம் கூறுதல்

11 இடதுபுறம் ஸலாம் கூறுதல்



15. மூன்று ரக்அத் தொழுகையாகவோ நான்கு ரக்அத் தொழுகையாகவோ இருந்தால் தஷஹ்ஹுத் ஓதியதன் பின்னால் தக்பீர் கூறியவனாக இரு கைகளையும் உயர்த்தி எழுந்து முதல் ரக்அத்தில் நடந்துகொண்டது போலவே நடந்துகொள்ள வேண்டும். நிற்கும்போது சூரத்துல்ஃபாத்திஹாவை மட்டும் ஓத வேண்டும்.

16. இறுதி தஷஹ்ஹுதிற்காக மூன்று அல்லது நான்கு ரக்அத் தொழுகைகளில் அமரும்போது 'தவர்ருக்' முறையில் அமர வேண்டும்.

தவர்ருக் என்பது வலதுகாலை அதன் விரல்கள் கிப்லாவை நோக்கி இருக்குமாறு நட்டி வைக்க வேண்டும். இடது காலை மடித்து வலது கெண்டைக்காலுக்குக் கீழால் கொண்டு வந்து தரையில் அமரவேண்டும். (பார்க்க: படம்- 12)

12. தவர்ருக் அமர்வு படம்



சிந்தனைக்குச் சில

- ஒருவர் அஸர் தொழும்போது முதல் ரக்அத்திலிருந்து எழுந்ததும் ருகூவை விட்டுவிட்டு பிறகு ஸஜ்தா செய்திருக்கிறார். அவருடைய தொழுகை நிறைவேறுமா?
- ஒருவர் மதீனாவை நோக்கி தொழுகின்றார் எனில் அவரது தொழுகையின் நிலை என்ன?
- ஒருவர் தொழுகைக்குரிய நேரம் வரும்முன் தொழுதுவிட்டார் எனில் அவருடைய தொழுகையின் நிலையென்ன?

**இரண்டாவதாக**

## தஷஹ்ஹுத் மனப்பாடம்

இரண்டாவது ரக்அத் முடிந்து ஸஜ்தாவிலிருந்து தலையை உயர்த்தியதும் அமர்ந்து தஷஹ்ஹுத் ஓத வேண்டும். இவ்வாறே மூன்றாவது அல்லது நான்காவது ரக்அத்களாக அமைகின்ற கடைசி ரக்அத்திலும் ஓத வேண்டும். அந்த தஷஹ்ஹுத் இதோ:

> அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு அஸ்ஸலாமு அலைனா வ அலா இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன், அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரஸூலுஹு

**மூன்றாவதாக**

## அல்ஃபாத்திஹா மனப்பாடம் (மீள்பார்வை)

**நான்காவதாக**

## உளூவும் தொழுகையும் (செய்முறை - மீள்பார்வை)

## தொழுகையில் ஓதப்படும் துஆக்களின் அட்டவணை

| துஆவின்பெயர் | ஓதவேண்டிய இடம் | துஆ |
|---|---|---|
| தக்பீர் | தொழுகையை தொடங்கும்போதும் ஒரு ருக்னிலிருந்து மறு ருக்னுக்கு மாறும்போதும் | அல்லாஹு அக்பர் |
| ஆரம்ப துஆ | முதல் தக்பீரு (தஹ்ரீமாவு)க்குப் பின்பு | ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலா இலாஹ கைருக |
| தஅவ்வுத் | ஃபாத்திஹாவுக்கு முன்னால் | அவூது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர்ரஜீம் |
| பஸ்மலா | ,, | பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் |
| ஃபாத்திஹா | நிலையில் | (முன்னர் கூறப்பட்டுள்ளது) |
| தஃமீன் | ஃபாத்திஹாவுக்குப்பின் | ஆமீன் |
| ருகூவின் தஸ்பீஹ் | ருகூவில் | ஸுப்ஹான ரப்பியல்அளீம் |
| தஸ்மீஃ | ருகூவிலிருந்து எழும்போது | ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ் |
| தஹ்மீத் | ருகூவுக்குப்பின் நிலையின் போது | ரப்பனா வலகல் ஹம்த் |
| ஸுஜூதின் தஸ்பீஹ் | ஸுஜூதில் | ஸுப்ஹான ரப்பியல் அஃலா |
| இஸ்திக்ஃபார் | இரு ஸஜ்தாக்களுக்கும் இடையில் | ரப்பிக்ஃபிர் லீ |
| தஷஹ்ஹுத் | இரு ரக்அத்களுக்குப்பின் முதல் அமர்வில், மூன்றாவது அல்லது நான்காவது ரக்அத்களின் கடைசி அமர்வில் | (முன்னர் கூறப்பட்டுள்ளது) |
| ஸலவாத் | தஷஹ்ஹுதின் இறுதி அமர்வில் | (பின்னர் கூறப்படும்) |
| தஸ்லீம் | தொழுகையிலிருந்து வெளியேறும்போது | அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் |

## (( சுயபரிசோதனை ))

### ஓத வேண்டும்:

1. சூரத்துல்.ஃ.பாத்திஹா.
2. தஷஹ்ஹுத் ஆகியவற்றை

### ஒரு ரக்அத்திற்கு எத்தனை ருகூவு, ஸஜ்தாக்கள்?

..............................................................................................................

### கீழ்க்காணும் வாசகங்களைச் ☑சரியா ☒தவறா அடையாளமிடுக:

- ☐ தொழுகையில் முதலில் நிலை பின்பு ஸஜ்தா பின்பு ருகூவு
- ☐ முதல் தக்பீரில் மாத்திரம் கைகளை உயர்த்த வேண்டும்
- ☐ முதல் ரக்அத்தின் ருகூவு முடிந்ததும் இரண்டாம் ரக்அத்திற்காக எழ வேண்டும்
- ☐ அவூது, பிஸ்மிக்குப் பிறகு சூரத்துல்.ஃ.பாத்திஹா ஓத வேண்டும்
- ☐ இரு ஸஜ்தாக்களுக்கிடையில் தஷஹ்ஹுத் ஓத வேண்டும்
- ☐ வலது புறமும் இடது புறமும் ஸலாம்கூறி தொழுகையை முடிக்க வேண்டும்

### பொருத்துக:

| A | B |
|---|---|
| த அ வ் வு த் | ஸுப்ஹான ரப்பியல் அஃ.லா |
| ருகூவின் தஸ்பீஹ் | ஸுப்ஹான ரப்பியல் அளீம் |
| ஸுஜூதின் தஸ்பீஹ் | அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் |
| தஸ்லீம் | அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் |
| | ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ் |

ஐந்தாவது பாடம்

# ஸலவாத் மனப்பாடம்

## பாடத்தின் நோக்கங்கள்

இந்தப்பாடம் முடிவடையும்போது புதிய சகோதரரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள்:

1. இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளை முழுமையாகக் கூறுதல்
2. ஈமானின் அடிப்படை அம்சங்களை முழுமையாகக் கூறுதல்
3. உளூவின் செயல்முறையை சரியாக நிறைவேற்றல்
4. ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர், லாயிலாஹ இல்லல்லாஹ் ஆகிய வாசகங்களைக் கூறிக்கொண்டு தொழுகையின் அசைவுகளை மேற்கொள்ளல்

## பாடத்திற்குத் தேவையான காலப் பங்கீடு

| தலைப்புகள் | நேரம் (நிமிடங்கள்) |
|---|---|
| இஸ்லாம் மற்றும் ஈமானின் அடிப்படை அம்சங்கள் | 25 |
| உளூ - செயல்முறை | 25 |
| தொழுகை – செயல்முறை | 25 |
| எதிர்பார்ப்பு நிறைவேறியதா என்பதை உறுதிசெய்தல் | 15 |

## பாடத்தைக் கற்பிப்பதற்கான உபகரணங்கள்

1. இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்கள் எழுதப்பட்ட பதாகை
2. ஈமானின் அடிப்படை அம்சங்கள் எழுதப்பட்ட பதாகை
3. இஸ்லாம் மற்றும் ஈமானின் அம்சங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான ஸ்டிக்கர்கள்
4. உளூ மற்றும் தொழுகையின் முறை பற்றிய தனித்தனி படங்கள். அவற்றை புதிய சகோதரர் வரிசைப்படுத்த வேண்டும்.

**முதலாவதாக**

## ஸலவாத் (மனப்பாடம்)

தஷஹ்ஹுத் ஓதி முடிந்த பிறகு நபி (ஸல்) அவர்களின்மீது ஸலவாத் ஓத வேண்டும். அதன் வாசகம் வருமாறு: அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத். வபாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்.

**இரண்டாவதாக**

## ஃபாத்திஹாவும் தஷஹ்ஹுதும் மனப்பாடம் (மீள்பார்வை)

**மூன்றாவதாக**

## தொழுகை (ஃபாத்திஹா - தஷஹ்ஹுதுடன் செய்முறை)

ஆறாவது பாடம்

# இக்லாஸ் அத்தியாயம் மனப்பாடம்

## பாடத்தின் நோக்கங்கள்

பாடம் நடத்தி முடிக்கப்பட்ட பின்பு மாணவரிடம் எதிர்பார்க்கப்படுபவை:

1 மனப்பாடமாக சூரத்துல் இக்லாஸ் ஓத வேண்டும்
2 மனப்பாடமாகவும் முறையாகவும் சூரத்துல் ∴பாத்திஹா ஓத வேண்டும்
3 மனப்பாடமாகவும் முறையாகவும் தஷஹ்ஹுத் ஓத வேண்டும்

## பாடம் கற்பிக்கப்படுவதற்கான காலப்பங்கீடு

| தலைப்புகள் | நேரம் (நிமிடம்) |
|---|---|
| சூரத்துல் இக்லாஸ் மனப்பாடமாக ஓதல் | 25 |
| சூரத்துல்∴பாத்திஹா - மறுபார்வை | 10 |
| தஷஹ்ஹுத் - மறுபார்வை | 10 |
| ஸலவாத் - மறுபார்வை | 10 |
| உளூ, தொழுகை செயல்முறை | 20 |
| நோக்கங்கள் நிறைவேறியதா என்பதை உறுதிப்படுத்தல் | 15 |

## கற்பிப்பதற்குத் தேவையான உபகரணங்கள்

1 சூரத்துல் இக்லாஸைக் கற்பிப்பதற்கு ஒலிநாடா
2 சூரத்துல் இக்லாஸ் ஸ்டிக்கர்

முதலாவதாக

இக்லாஸ் அத்தியாயம் (மனப்பாடம்)

இக்லாஸ் அத்தியாயம்:

**பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம். குல்ஹுவல்லாஹு அஹத். அல்லாஹுஸ் ஸமத். லம்யலித் வலம் யூலத். வலம் யகு(ன்)ல்லஹு கு.ஃபுவன் அஹத்.**

இரண்டாவதாக

ஃபாத்திஹா அத்தியாயம் மனப்பாடம் (மீள்பார்வை)

மூன்றாவதாக

தஷஹ்ஹுதும் ஸலவாத்தும் மனப்பாடம் (மீள்பார்வை)

நான்காவதாக

உளூவும் தொழுகையும் (செய்முறை - மீள்பார்வை)

ஏழாவது பாடம்

# அஸ்ர் மற்றும் கவ்ஸர் அத்தியாயங்கள் மனப்பாடம்

## பாடத்தின் நோக்கங்கள்

பாடம் நடத்தி முடிக்கப்பட்ட பின்பு மாணவரிடம் எதிர்பார்க்கப்படுபவை:

1. சூரத்துல்அஸ்ர் மனப்பாடமாக ஓத வேண்டும்
2. சூரத்துல்கவ்ஸர் மனப்பாடமாக ஓத வேண்டும்
3. சூரத்துல்.'.பாத்திஹா மனப்பாடமாகவும் முறையாகவும் ஓத வேண்டும்
4. சூரத்துல்இக்லாஸ் மனப்பாடமாகவும் முறையாகவும் ஓத வேண்டும்
5. தஷஹ்ஹுத் மனப்பாடமாகவும் முறையாகவும் ஓத வேண்டும்
6. ஸலவாத் மனப்பாடமாகவும் முறையாகவும் ஓத வேண்டும்

## பாடம் கற்பிக்கப்படுவதற்கான காலப்பங்கீடு

| தலைப்புகள் | நேரம் (நிமிடம்) |
|---|---|
| சூரத்துல்அஸ்ர் மனப்பாடம் | 20 |
| சூரத்துல்கவ்ஸர் மனப்பாடம் | 20 |
| சூரத்துல்.'.பாத்திஹா - மறுபார்வை | 10 |
| சூரத்துல் இக்லாஸ் - மறுபார்வை | 5 |
| தஷஹ்ஹுத் -மறுபார்வை | 5 |
| ஸலவாத் - மறுபார்வை | 5 |
| தொழுகை மற்றும் உளூ செயல் முறை | 15 |
| நோக்கங்கள் நிறைவேறியதா என்பதை உறுதிப்படுத்தல் | 10 |

## கற்பிப்பதற்குத் தேவையான உபகரணங்கள்

1. சூரத்துல் அஸ்ர், சூரத்துல் கவ்ஸர் கற்பிப்பதற்கான ஒலிநாடா
2. சூரத்துல் அஸ்ர் ஸடிக்கர்
3. சூரத்துல் கவ்ஸர் ஸடிக்கர்

முதலாவதாக

## அஸ்ர் அத்தியாயம் (மனப்பாடம்)

அஸ்ர் அத்தியாயம்:

**பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம். வல்அஸ்ர். இன்னல் இன்ஸான ல.்.பீ குஸ்ர். இல்லல்லதீன ஆமனூ வஅமிலுஸ்ஸாலிஹாத்தி வதவாஸவ் பில்ஹக்கி வதவாஸவ் பிஸ்ஸப்ர்**

## கவ்ஸர் அத்தியாயம் (மனப்பாடம்)

கவ்ஸர் அத்தியாயம்:

**பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம். இன்னா அ.்.தைனாகல்கவ்ஸர். ்.பஸல்லி லிரப்பிக வன்ஹர் இன்ன ஷானிஅக ஹுவல் அப்தர்.**

**இரண்டாவதாக**

ஃபாத்திஹா, இக்லாஸ் அத்தியாயங்கள் (மனப்பாடம்-மீள்பார்வை)

**மூன்றாவதாக**

தஷஹ்ஹுதும் ஸலவாத்தும் (மனப்பாடம் - மீள்பார்வை)

**நான்காவதாக**

உளூவும் தொழுகையும் (செயல்முறை-மீள்பார்வை)

## இறுதித்தேர்வு (மதிப்பெண்: 100)

**தேர்வுநடத்துவதற்கான சில விதிமுறைகள்**

1. பாடத்திட்டம் முடிவடைந்த பின்பு இறுதித்தேர்வு உள்ளது என்பதை மாணவருக்கு அறிவிக்க வேண்டும்.
2. தேர்வில் வெற்றியடைவதற்குக் குறைந்த பட்சம் 80% மதிப்பெண்களாவது எடுக்க வேண்டும்.
3. மாணவர், குறைந்த பட்ச மதிப்பெண்கள்கூட எடுக்காத பட்சத்தில் அவரைத் தகுதிபடுத்துவதற்கு மீண்டும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. ஈமானின் அடிப்படை அம்சங்களைக்கூறுக! 12

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

2. இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களைக்கூறுக! 10

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

## 3. கீழ்க்காணும் சூழ்நிலைகளில் என்ன செய்ய வேண்டும்?

15

(1) நீங்கள் தொழுகையில் ஈடுபட்டிருக்கும்போது உங்களுக்குக் காற்று வெளியாகிவிட்டது.

.......................................................................................................................

(2) உறங்கி விழிக்கும்போது உங்களின் ஆடையில் இந்திரியத்தின் அடையாளத்தைக் காண்கிறீர்கள்

.......................................................................................................................

(3) தூய்மையில்லாமலிருக்கும்போது நீங்கள் தொழ விரும்புகிறீர்கள்

.......................................................................................................................

(4) உளூ செய்யும்போது கால்களைக் கழுவ மறந்துவிட்டீர்கள்

.......................................................................................................................

(5) உளூ செய்துவிட்டு பிறகு உறங்கி எழுந்ததும் தொழ நாடுகிறீர்கள்

.......................................................................................................................

## 4. கீழ்க்காணும் தொழுகைகளுக்குரிய ரக்அத்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக!

10

1- ஃபஜ்ர் ( )

2- ளுஹர் ( )

3- அஸ்ர் ( )

4- மக்ரிப் ( )

5- இஷா ( )

செயல்முறை:

(1) உளூ செய்தல் 15

(2) தொழுகையை நிறைவேற்றல் 25

(3) சூரத்துல்.'.பாத்திஹா ஒப்புவித்தல் 7

(4) கவ்ஸர்-இக்லாஸ் சூரத்துகளை ஒப்புவித்தல் 6